

நீலகிரி மாவட்டத்தில், தென்மேற்கு பருவமழையையொட்டி முன்னெச்சரிக்கை நடவடிக்கையாக ஜெல் மேல்நிலைப்பள்ளியில் நிவாரண முகாமில் தங்க வைக்கப்பட்டுள்ள பொதுமக்களுக்கு நீலகிரி நாடாளுமன்ற உறுப்பினர் ஆ.இராசா, அரசு தலைமைக் கொறடா கா.ராமச்சந்திரன் ஆகியோர் நேற்று முன்தினம் (27.05.2025) நிவாரணப் பொருட்களை வழங்கினார்கள். உடன் கண்காணிப்பு அலுவலர் / துணிநூல் துறை இயக்குநர் திருமதி லலிதா, மாவட்ட ஆட்சித்தலைவர் திருமதி லட்சுமி பவ்யா தண்ணீரு, மாவட்ட காவல் கண்காணிப்பாளர் திருமதி என்.எஸ்.நிஷா, கூடுதல் ஆட்சியர் (வளர்ச்சி) கௌசிக் உட்பட பலர் உள்ளனர்.

அரியலூர் மாவட்டத்தில் பல்வேறு வழித்தடங்களில்

# மகளிர் கட்டணமில்லா விடியல் பயண நகரப் பேருந்துகள்!

## அமைச்சர் எஸ்.எஸ்.சிவசங்கர் கொடியசைத்து துவக்கி வைத்தார்!

அரியலூர், மே 29 -

அரியலூர் மாவட்டம், அரியலூர் சட்டமன்றத் தொகுதி, கீழப்பழுவூர் ஊராட்சி புதிய பேருந்து நிலையத்தில் தமிழ்நாடு அரசு போக்குவரத்துக் கழகம் (கும்ப) லிட், திருச்சி மண்டலம், அரியலூர் கிளை / குன்னம் கிளை சார்பில் பல்வேறு வழித்தடங்களில் பொதுமக்கள் பயன்பெறும் வகையில் 05 மகளிர் கட்டணமில்லா விடியல் பயண நகரப் பேருந்து மற்றும் 01 புறநகர் பேருந்து இயக்கத்தினை தமிழ்நாடு அரசு போக்குவரத்து மற்றும் மின்சாரத் துறை அமைச்சர் எஸ்.எஸ்.சிவசங்கர் கொடியசைத்து துவக்கி வைத்து, திருமானூர் வரையில் பேருந்தில் பயணம் மேற்கொண்டார்.

இந்நிகழ்ச்சிகள் மாவட்ட ஆட்சித்தலைவர் பொ.இரத்தினசாமி, அரியலூர் சட்டமன்ற உறுப்பினர் கு.சின்னப்பா முன்னிலையில் நடைபெற்றது.

தமிழ்நாடு முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்கள் தலைமையிலான தமிழ்நாடு அரசின் போக்குவரத்துக் கழகம் சார்பில், பொதுமக்கள், மகளிர், மாற்றுத்திறனாளிகள், திருநங்கைகள், பள்ளி மற்றும் கல்லூரி மாணாக்கர்கள் உள்ளிட்டோர்களுக்கு அரசு பேருந்து சேவை சிறப்பாக செயல்பட்டு வருகிறது.

அந்தவகையில் இன்றையதினம், அரியலூர் மாவட்டம், திருமானூர் ஊராட்சி ஒன்றியம், கீழப்பழுவூர் புதிய பேருந்து நிலையத்தில் பொதுமக்களின் கோரிக்கையினை ஏற்று 05 மகளிர் கட்டணமில்லா விடியல் பயண நகரப் பேருந்துகளையும் மற்றும் 01 புறநகர் பேருந்து இயக்கத்தினையும் தமிழ்நாடு அரசு போக்குவரத்து மற்றும் மின்சாரத் துறை அமைச்சர் எஸ்.எஸ்.சிவசங்கர் கொடியசைத்து துவக்கி வைத்தார்.

அதன்படி நகரப் பேருந்து தடம் எண்.023A காலை 8.50 மணிக்கு அரியலூரில் இருந்து புறப்பட்டு கீழப்பழுவூர் வழியாக திருமானூர் சென்றடையும். மீண்டும் காலை 9.40 மணிக்கு திருமானூரில் இருந்து புறப்பட்டு கீழப்பழுவூர் வழியாக அரியலூர் வந்தடையும். நகரப் பேருந்து தடம் எண்.008A மாலை 4.35 மணிக்கு அரியலூரில் இருந்து புறப்பட்டு கீழப்பழுவூர் வழியாக திருமானூர் சென்றடையும். மீண்டும் மாலை 5.35 மணிக்கு திருமானூரில் இருந்து புறப்பட்டு கீழப்பழுவூர் வழியாக அரியலூர் வந்தடையும் வகையில் மகளிர் விடியல் பயண பேருந்து துவக்கி வைக்கப்பட்டுள்ளது.

மேலும், நகரப் பேருந்து தடம் எண்.001A காலை 8.00 மணிக்கு இயக்கப்படும் மகளிர் விடியல் பயண பேருந்து அரியலூர் ஓரியூர் (வழி) வி.கைகாட்டி, பொய்யூர் வழித்தடத்திலும், கீழப்பழுவூர் பகுதி மக்கள் பயன்பெறும் வகையில் நகரப் பேருந்து தடம் எண்.017A பிற்பகல் 2.00 மணிக்கு மகளிர் விடியல் பயண பேருந்து அரியலூரில் புறப்பட்டு கீழப்பழுவூர் வழியாக வி.கைகாட்டி சென்றடையும், பிற்பகல் 3.10 மணிக்கு வி.கைகாட்டியில் புறப்பட்டு கீழப்பழுவூர் வழியாக அரியலூர் வந்தடையும் வகையில் துவக்கி வைக்கப்பட்டுள்ளது.

இதேபோன்று நகரப் பேருந்து தடம் எண்.022A மாலை 4.10 மணிக்கு அரியலூர் விளாங்குடி (வழி) அஸ்தினாபுரம், வி.கைகாட்டி வழித்தடநடையில் வி.கைகாட்டியிலிருந்து 2 கி.மீ தூரமுள்ள விளாங்குடி கிராமத்தை தொட்டு இயங்கும் வகையிலும்,

மேலும், நகரப் பேருந்து தடம் எண்.015A காலை 8.10 மணிக்கு அரியலூரிலிருந்து புறப்பட்டு கீழப்பழுவூர் வழியாக கோவிலூர் செல்லும் மகளிர் கட்டணமில்லா பேருந்து நடையினை கருப்பூர் பிரிவி லிருந்து 2 கி.மீ தொலைவில் உள்ள பொய்யூர் கிராமத்தை தொட்டு இயங்கும் வகையிலும், புறநகரப் பேருந்து தடம் எண்.602E மாலை 5.35 மணிக்கு அரியலூரில் இருந்து புறப்பட்டு மரவனூர் செல்லும் புறநகர் பேருந்து நடையினை கீழப்பழுவூர், அயன்சுத்தமல்லி வழியாக கல்லக்குடி வரை தடநிட்டிப்பு செய்து பொதுமக்கள், வியாபாரிகள், மாணவ, மாணவிகள் உள்ளிட்டோர் பயன்பெறும் வகையில் தமிழ்நாடு அரசு போக்குவரத்து மற்றும் மின்சாரத்துறை அமைச்சர் எஸ்.எஸ்.சிவசங்கர் அவர்கள் துவக்கி வைத்து, திருமானூர் வரையில் பேருந்து பயணம் மேற்கொண்டார்.

அதனைத்தொடர்ந்து செய்தியாளர்கள் சந்திப்பில் தமிழ்நாடு அரசு போக்குவரத்து மற்றும் மின்சாரத் துறை அமைச்சர் எஸ்.எஸ். சிவசங்கர் தெரிவித்ததாவது:

கோடை மழையுடன் சூறைக்காற்றும் அடிப்பதால் பல்வேறு இடங்களில் சேதம் அடைந்த மின்கம்பங்களை உடனடியாக மாற்ற மின்வாரியத்துறை ஊழியர்கள் தயார் நிலையில் உள்ளனர். ஊட்டியில் பெய்து வரும் மழையால் பாதிக்கப்பட்டுள்ள மின் கம்பங்கள் உடனடியாக சரி செய்யப்பட்டு வருகின்றன. தென்மேற்கு பருவமழை மற்றும் காற்றினால் சேதம் அடையும் மின்கம்பங்களை மாற்ற உரிய நடவடிக்கை எடுக்கப்பட்டு வருகிறது. மேலும் தேவையான அளவிற்கு மி ன்கம்பங்கள் தயார் நிலையில் உள்ளன. மின்சாரம் வழங்குவது தொடர்பான புகார்கள் இருந்தால் மின்னகத்தை 98947 98947 என்ற எண்ணில் பொதுமக்கள் தொடர்பு கொள்ளலாம் என தெரிவித்தார்

டெல்லிக்குச் சென்ற தமிழ்நாடு முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்கள் நமக்கான நிதியை எவ்வாறு பகிர்ந்து அளிக்க வேண்டும் என அந்த கூட்டத்தில் பேசினார். அனைத்து மாநில முதலமைச்சர்கள் மத்தியில் பேசினர். நம்முடைய முதலமைச்சர் பேசியதை பார்த்துதான் இவ்வாறு நிதியை கேட்க வேண்டும் என்ற எண்ணமே மற்ற மாநில முதல்வர்களுக்கு வந்துள்ளது. எனவே அனைத்து மாநில முதல்வர்களுக்கும் வழிகாட்டும் முதல்வராக நமது முதல்வர் மு.க.ஸ்டாலின் அவர்கள் உள்ளார். மேலும், தமிழ்நாட்டில் மகளிர் விடியல் பயணத்தின் மூலம் கடந்த நான்கு ஆண்டுகளில் 700 கோடி பயணங்கள் பெண்களால் மேற்கொள்ளப்பட்டுள்ளது. இது மிகப்பெரிய புரட்சியாகும். இது மாதிரி எந்த மாநிலத்திலும் செயல்படுத்தப்படவில்லை. 700 கோடி பயணங்கள் மேற்கொள்ளப்பட்டுள்ளது என்றால் அந்த அளவிற்கு பெண்களின் வாழ்க்கையில் முன்னேற்றம் ஏற்பட்டுள்ளது என்பது தெரிகிறது என தமிழ்நாடு அரசு போக்குவரத்து மற்றும் மின்சாரத் துறை அமைச்சர் எஸ்.எஸ். சிவசங்கர் கூறினார்

இந்நிகழ்ச்சியில் தமிழ்நாடு அரசு போக்குவரத்துக் கழகம் (கும்பகோணம்) நிர்வாக இயக்குநர் இரா.பொன்முடி, தமிழ்நாடு அரசு போக்குவரத்துக் கழகம் (கும்ப) லிட், திருச்சி மண்டலம் பொது மேலாளர் சதீஸ்குமார், அரியலூர் வருவாய் கோட்டாட்சியர் கோவிந்தராஜ், அரியலூர் வட்டாட்சியர் முத்துலெட்சுமி, மாவட்ட துணை செயலாளர்கள் சி. சந்திரசேகரன், லதாபாலு, ஒன்றிய கழக பொறுப்பாளர்கள் இரா.கென்னடி, மா.அன்பழகன், ரெ.அசோகசக்ரவர்த்தி, மத்திய தொழிற்சங்க செயலாளர் குணசேகரன், மத்திய தொழிற்சங்க தலைவர் டி. சேகர், அரியலூர் தொமுச செயலாளர் பி.வி.அன்பழகன், மாவட்ட பொறியாளர் அணி அமைப்பாளர் கே.சி.லூயிகதிரவன், மாவட்ட மகளிர் தொண்டரணி அமைப்பாளர் மீனாசாமி நாதன், மாவட்ட சுற்றுச்சூழல் அணி அமைப்பாளர் வின்செண்ட் ராஜா, மாவட்ட அணிகளின் துணை அமைப்பாளர்கள் எஸ். ஆர்.முருகேசன், செல்வ. பிரபாகரன், சட்டமன்ற தகவல்தொடர்பு ஒருங்கிணைப்பாளர் சுபாஷினி கமலகண்ணன், ஓட்டுநர்கள், நடத்துநர்கள் மற்றும் இதர அரசு அலுவலர்கள் உள்ளிட்ட பலர் கலந்துகொண்டனர்.



நீலகிரி மாவட்டம் குன்னூர் புனித அந்தோணியார் மேல்நிலைப்பள்ளியில் தமிழ்நாடு மாநில சிறுபான்மையினர் ஆணையம் சார்பாக நடைபெற்ற கல்லூரி மாணவ,மாணவியருக்கான பேச்சுப்போட்டியினை அரசு தலைமைக் கொறடா கா.ராமச்சந்திரன் நீலகிரி மாவட்ட கழக பொறுப்பாளர் கே.எம் ராஜு ஆகியோர் கழக நிர்வாகிகளுடன் துவக்கி வைத்தனர்.



ஈரோடு மாவட்ட ஆட்சியர் கூட்டரங்கில் மாற்றுத்திறனாளிகள் நலத்துறை சார்பில் மாற்றுத்திறனாளிகளுக்கு இணைப்பு சக்கரம் பொருத்தப்பட்ட பெட்ரோல் ஸ்கூட்டர்களை வீட்டு வசதி மற்றும் நகர்ப்புற வளர்ச்சித் துறை, மதுவிலக்கு மற்றும் ஆயத்தீர்வைத் துறை அமைச்சர் சு.முத்துசாமி வழங்கினார். நிகழ்வில் மாவட்ட ஆட்சித்தலைவர் ராஜகோபால் சுன்கரா, மாநிலங்களவை உறுப்பினர் அந்தியூர் ப.செல்வராசு, சட்டமன்ற உறுப்பினர்கள் அந்தியூர் ஏ.ஜி.வெங்கடாசலம், ஈரோடு கிழக்கு வி.சி.சந்திரகுமார், மேயர் சு.நாகரத்தினம், துணை மேயர் வி.செல்வராஜ், மாவட்ட வருவாய் அலுவலர் சு.சாந்தகுமார் உள்ளிட்ட பலர் உள்ளனர்.

திராவிட மாடல் ஆட்சியில் அரசுப்பணியில்

# பெண்கள் சாதனை படைத்து வருகின்றனர்!

## அமைச்சர் ஐ.பெரியசாமி பேச்சு!



திண்டுக்கல்,மே 29-

திராவிட மாடல் ஆட்சியில் அரசுப்பணியில் பெண்கள் சாதனை படைத்து வருகின்றனர் என்று ஊரக வளர்ச்சி துறை அமைச்சர் ஐ.பெரியசாமி பேசியதோடு தேனி மாவட்டம் சின்னமனூரைச் சேர்ந்த திவ்யா என்ற மாணவி காவல்துறை துணை கண்காணிப்பாளர் பதவிக்கு தேர்வானதை அமைச்சர் ஐ. பெரியசாமியிடம் காண்பித்து வாழ்த்துப் பெற்றார்.

திண்டுக்கல் மாவட்டம் ஆத்தூர் சட்டமன்ற தொகுதி தி.மு.க. உறுப்பினரும், தி.மு.க. மாநில துணை பொதுச்செயலாளரும், ஊரக வளர்ச்சித்துறை அமைச்சருமான ஐ.பெரியசாமியிடம் ஆத்தூர் தொகுதியைச் சேர்ந்த பொதுமக்கள் மற்றும் கோரிக்கை மனுக்கை பெற்று உடனடியாக சம்மந்தப்பட்ட அதிகாரிகளை தொடர்பு கொண்டு தீர்வு வழங்கியதோடு மாற்றுத்திறனாளிகளுக்கு இலவச வீட்டு மனை பட்டாக்களை வழங்கினார்.

பொதுமக்களின் கோரிக்கைகளை உடனடியாக தீர்வு வழங்கினார். மகளிர் உரிமைத்தொகை பெறாமல் விடுபட்ட போன குடும்பத் தலைவிகளுக்கு அந்த பகுதியில் உள்ள தி.மு.க. நிர்வாகிகள் மற்றும் இளைஞரணியினர் இல்லம் தேடி சென்று அவர்களிடம் மனுக்களைப் பெற்று அவர்களுக்கு உரிமைத்தொகை பெற்றுத்தர நடவடிக்கை எடுக்க வேண்டும் என்றதோடு கடந்த தி.மு.க. ஆட்சியின் போது வழங்கப்பட்ட முதியோர் உதவித்தொகையை அ.தி.மு.க. ஆட்சி நிறுத்தி விட்டனர். கடந்த பத்து ஆண்டுகளாக அவர்கள் முதியோர் உதவித்தொகை பெறாமல் அவதிப்பட்டு வருகின்றனர். அவர்களையும் தேடிச்சென்று அவர்களிடம் மனுக்களை பெற்று முதியோர் உதவித்தொகை பெற தி.மு.க.வினர் இளைஞரணியினர் நடவடிக்கை எடுக்க வேண்டும் என்றார்.

அப்போது தேனி தெற்கு மாவட்டம் தி.மு.க.வை சேர்ந்த அவைத்தலைவர் டி.மனோகரனின் மருமகள் திவ்யா குரூப் 1 தேர்வில் வெற்றிபெற்று காவல்துறை துணை கண்காணிப்பாளர் பதவிக்கு தேர்வானதை அமைச்சர் ஐ.பெரியசாமியிடம் காண்பித்து வாழ்த்துப் பெற்றார். அவரை வாழ்த்தி பேசிய அமைச்சர் ஐ.பெரியசாமி கடந்த 4 ஆண்டுகளாக நூற்றுக்கணக்கான பெண்கள் அரசுப்பணிக்கு தேர்வு பெற்றுள்ளனர். திராவிட மாடல் ஆட்சியில் பெண்கள் அரசுப்பணியில் சேர்ந்து சாதனை படைத்து வருகின்றனர். அதற்கு காரணம் முத்தமிழ் அறிஞர் கலைஞர் வழியில் வந்த திராவிட மாடல் ஆட்சி நாயகர் மு.க.ஸ்டாலின் அவர்கள் தலைமையிலான திராவிட மாடல் அரசு தான் என்றார்.

நிகழ்ச்சியின் போது திண்டுக்கல் கிழக்கு மாவட்ட அவைத்தலைவர் வழக்கறிஞர் காமாட்சி, பொருளாளர் கு.சத்தியமூர்த்தி, தலைமைச் செயற்குழு உறுப்பினர்கள் தண்டபாணி, ஆத்தூர் நடராஜன், தி.மு.க. நிர்வாகி அம்பை ரவி, ஆத்தூர் கிழக்கு ஒன்றியச் செயலாளர் முருகேசன், அமைச்சரின் உதவியாளர் வத்தலகுண்டு ஹரிஹரன், ஆத்தூர் வார்டு பிரதிநிதி சேகர், வார்டு செயலாளர் காசிநாதன் உட்பட தி.மு.க. நிர்வாகிகள் பலர் உடனிருந்தனர்.



விழுப்புரம் மாவட்டம் திண்டிவனம் வட்டாட்சியர் அலுவலகத்தில் நடைபெற்ற ஜமாபந்தி நிகழ்ச்சியில் வருவாய் தீர்வாய் அலுவலரும்,விழுப்புரம் மாவட்ட பிற்படுத்தப்பட்டோர் நல அலுவலருமான தமிழரசன் தலைமை தாங்கி ஜமாபந்தி நிகழ்ச்சி தொடங்கி வைத்தார். நிகழ்ச்சியில் முன்னாள் அமைச்சர் செஞ்சி மஸ்தான் எம்.எல்.ஏ. கலந்து கொண்டு பொதுமக்களிடமிருந்து கோரிக்கை மனுக்களைப் பெற்றுக் கொண்டுபொதுமக்களின் மனுக்கள் மீது உடனடியாக தீர்வு காணப்படும் என அவர் தெரிவித்தார். உடன் வட்டாட்சியர் யுவராஜ்,முன்னாள் சட்டமன்ற உறுப்பினர்சேது நாதன், நகரமன்ற தலைவர் நிர்மலா ரவிச்சந்திரன், நகர் செயலாளர் ஆசிரியர் கண்ணன், மயிலம் வடக்கு ஒன்றிய செயலாளர் மணிமாறன் ஆகியோர் உள்ளனர்.



திருப்பத்தூர் ஒன்றியத்தில் முதலமைச்சரின் கிராம சாலைகள் மேம்பாடு திட்டம் மற்றும் மலைப்பகுதி சிறப்பு மேம்பாட்டுத்திட்டம் ஆகிய புதிய பணிகளுக்கு ரூ.98.70 லட்சம் மதிப்பீட்டில் திருப்பத்தூர் அ.நல்லதம்பி எம்.எல்.ஏ. தலைமையில் அடிக்கல் நாட்டு விழா நடைபெற்றது. இந்நிகழ்ச்சியில் விஜயாஅருணாசலம், டி.ஆர்.ஞானசேகரன், பன்னீர்செல்வம், இளரவசிஇளங்கோ, கலைவாணி செல்வராஜ், எல்.சிவலிங்கம் பி.ஆர். சின்னபையன், கே.எஸ்.தேவேந்திரன் மற்றும் பலர் கலந்து கொண்டனர்.